**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன் B.A.,B.L.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25 ம் நாள் திங்கட்கிழமை**

**நிறைவேற்றுதல் மனு எண்.04/2023**
**இன்**
**அசல் வழக்கு எண்.31/2012**

கணேசபாண்டி ... மனுதாரர்/வாதி

/ எதிர் /

லெட்சுமி வகையறா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 11.08.2025 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் S.அரிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள வாதங்களை கருத்தில் கொண்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இந்நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்....

**உத்தரவு**

தாவா சொத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மனுதாரர்/வாதி வசம் ஒப்படைக்கக்கோரி சி.பி.சி. கட்டளை **21,** விதி **35** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.31/2012 வழக்கில் விளம்புகை மற்றும் சுவாதின பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரிய வழக்கில் மேற்படி பரிகாரங்கள் வழங்கி கடந்த 06.12.2014 ம் தேதி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், தீர்ப்பில் ஒரு மாத காலத்திற்குள்

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களது ஆக்கிரமிப்புகளை அகற்றி வாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அவ்வாறு செய்யத்தவறினால் நிறைவேற்றுதல் மனுதாக்கல் செய்து மனுதாரர்/வாதி அதனை நிறைவேற்றிக்கொள்ளலாம் என உத்தரவிடப்பட்டிருந்ததாகவும், ஆனால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வாதி வசம் ஒப்படைக்கவில்லை என்பதால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்**

மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. மனு சொத்து குறித்து கடந்த 06.12.2014 ம் தேதி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கப்பட்டதாக கூறியுள்ளது பொய்யானவை என்றும், அ.வ.எண்.31/2012 வழக்கில் சர்வே எண்.433/4A க்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டதால் கடந்த 06.12.2014 ம் தேதி தீர்ப்பாணை வழங்கப்பட்டதாகவும், அந்த தீர்ப்பாணையில் இந்த மனுவில் கண்ட சர்வே எண்.433/4 யுஇ என்ற சொத்து குறிப்பிடவில்லை என்றும், அந்த பகுதியில் இந்த மனுவின் சர்வே எண் சொத்தே இல்லை என்றும், அசல் வழக்கை தாக்கல் செய்யும்போது தவறான நான்குமால்களுடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இதே வழக்கில் முதுகுளத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் EP.No.09/2017 மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் EP No.01/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 30.11.2020 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டதை மறைத்து மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளதால் suppression of fact தோஷத்தால் மனு பாதிக்கப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**தீர்வு**

3) இந்த நிறைவேற்றுதல் மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

4) இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

5) அசல் வழக்கு எண்.31/2012 வழக்கில் விளம்புகை மற்றும் சுவாதின பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரிய வழக்கில் வாதிக்கு ஆதரவாக மேற்படி பரிகாரங்களை நீதிமன்றம் கடந்த 06.12.2014 ம் தேதி பிறப்பித்த தீர்ப்பில் ஒரு மாத காலத்திற்குள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களது ஆக்கிரமிப்புகளை அகற்றி வாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அவ்வாறு செய்யத்தவறினால் நிறைவேற்றுதல் மனுதாக்கல் செய்து மனுதாரர்/வாதி அதனை நிறைவேற்றிக்கொள்ளலாம் என உத்தரவிடப்பட்டிருப்பது மனுதாரர் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் மூலம் அறிய முடிகிறது.

மேற்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்ற உத்தரவினை நிறைவேற்றாமல் இருந்து வந்த நிலையில் மனுதாரர்/வாதி இந்த நிறைவேற்றுதல் மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நிறைவேற்றுதல் மனுவில் எதிருரை தாக்கல் செய்து அசல் வழக்கின் சர்வே எண்.433/4A க்கு பதிலாக தவறாக இம்மனுவில் சர்வே எண்.433/4 யுஇ என குறிப்பிடப்பட்டு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி சர்வே எண்.433/4 யுஇ என்பது அந்த பகுதியில் இல்லை என வாதம் செய்தார்.

இந்நிலையில் வழக்கின் ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்த வகையில், மனுதாரர் தாக்கல் செய்த நிறைவேற்றுதல் மனுவில் சர்வே எண்.433/4A என்பதற்கு பதிலாக சர்வே எண்.433/4 யுஇ என தட்டச்சு பிழை ஏற்பட்டுள்ளது தெரிய வருகிறது. நிறைவேற்றுதல் மனுவில் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாக வாதம் செய்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்வதற்கு இதுநாள்வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து விட்டு மனுதாரர் தாக்கல் செய்த நிறைவேற்றுதல் மனுவின் மீதான நடவடிக்கைகளை காலதாமதப்படுத்த வேண்டும் என உட்கருத்துடன் இம்மனுவில் எதிர்வாதம் செய்ய முன்வந்துள்ளார்.

மேலும் மனுதாரருக்கு சாதகமாக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்யவதற்கோ அல்லது மேல்முறையீட்டு மனுவோ நீதிமன்றத்தில் நிலுவையில் இல்லை என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. மேலும் இம்மனுவின் மனுதாரர்/வாதி தாக்கல் செய்த நிறைவேற்றுதல் மனுவில் சர்வே எண்.433/4யுஇ என தவறாக குறிப்பிடப்பட்டதற்கு தட்டச்சு பிழையே காரணம் என்பதால் சர்வே எண்.433/4யுஇ என்பதனை சர்வே எண்.433/4A என கொண்டே இம்மனுவின் மீதான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டும், தாவா சர்வே எண்.433/4A சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்க எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக, மனு அனுமதிக்கப்படுகிறது. தாவா சர்வே எண்.433/4A சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மனுதாரர் வசம் சுவாதீனத்தை ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை**.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு என் முன்பாக அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் நாள் திங்கட்கிழமையாகிய இன்று அவையறிய திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.08.25 17:29:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** : இல்லை
**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**: – இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.08.25 17:29:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
கடலாடி.
நிறைவேற்றுதல் மனு
எண்.04/2023
இன்
அ.வ. எண்.31/2012
நாள் : 25.08.2025.
சீரான உத்தரவு